பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**19 10 2026 MONDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா — நியூசிலாந்து தாராள வர்த்தக ஒப்பந்தம் ஏற்றுமதியாளர்களுக்கு புதிய வாய்ப்புகளை அளிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.
2. நாட்டின் கலாச்சாரமும், பாரம்பரியமும் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது என்று மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.
3. விவசாயிகளுக்கான மேம்படுத்தப்பட்ட இணையதள சேவையை மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் இன்று தொடங்கிவைத்தார்.
4. இஸ்லாமிய ஒத்துழைப்பு கவுன்சில் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியாவுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.
5. ஏமன் நாட்டில் **Houthi** படையினர் நடத்திய ஏவுகணை தாக்குதலில் 20 வீரர்கள் கொல்லப்பட்டனர்.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>

இந்தியா — நியூசிலாந்து தாராள வர்த்தக ஒப்பந்தம் ஏற்றுமதியாளர்களுக்கு புதிய வாய்ப்புகளை அளிக்கும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

இந்த வர்த்தக ஒப்பந்தம் நாளை விஜயதசமி நாளன்று நடைமுறைக்கு வரவுள்ள நிலையில், புதுதில்லியில் இன்று நடைபெற்ற கூட்டத்தில் பேசிய திரு பியூஷ்கோயல், 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையை எட்டுவதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி, இதுபோன்ற திட்டங்களை முனைப்போடு கொண்டுவருவதாக தெரிவித்தார்.

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கும், கைவினைக் கலைஞர்களுக்கும், வேளாண் துறையினருக்கும், மருந்துப்பொருள் ஏற்றுதியாளர்களுக்கும் புதிய வாய்ப்புகள் இந்த ஒப்பந்தத்தால் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

சரக்கு மற்றும் சேவைகளில் இந்தியா — நியூசிலாந்து இடையிலான இருதரப்பு வர்த்தகத்தை விரைவில் இருமடங்காக

உயர்த்துவது என்ற இலக்குடன் இருநாடுகளும் ஒருமித்து செயல்பட தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

2030-ஆம் ஆண்டுக்குள் 35 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு இருதரப்பு வர்த்தகம் வளர்ச்சிபெறும் என்றும் திரு பியூஷ்கோயல் தெரிவித்தார்.

இந்தியா — நியூசிலாந்து இடையேயான இருதரப்பு தாராள வர்த்தக ஒப்பந்தம் கடந்த ஏப்ரல் மாதம் புதுதில்லியில் கையெழுத்தானது.

<<<<<>>>>>>

நாட்டின் கலாச்சாரமும், பாரம்பரியமும் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது என்று மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று Ustad Bismillah Khan இளையோர் விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர், கலாச்சாரமும், அதன் தொன்மை சிறப்பும் நாட்டின் அடையாளமாகவும், ஆன்மாவாகவும் விளங்குகிறது என்று கூறினார்.

மாற்றத்திற்கான பாதையில் இந்தியா சென்று கொண்டிருப்பதாக குறிப்பிட்ட அவர், நாட்டின் வளர்ச்சியை ஒட்டுமொத்த உலகமும் உணர்ந்திருப்பதாக தெரிவித்தார்.

பெரிய மாற்றங்களை கொண்டுவருவதில் கலைஞர்கள் குறிப்பாக பாரம்பரிய கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் கலைஞர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பல தலைமுறைகளாக தங்களின் தரமான நடிப்பை வெளிப்படுத்தி, மக்களிடையே மாற்றங்களை ஏற்படுத்தும் சக்தியாக அவர்கள் திகழ்வதாகவும் கூறினார்.

கலைஞர்கள் தங்கள் வாழ்வில் கடுமையான சவால்களை சந்தித்துவரும் போதிலும், வளமான இந்தியாவுக்கு அவர்கள் வித்திடுவதாகவும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சங்கீத நாடக அகாடமியின் உஸ்தாத் பிஸ்மில்லா கான் விருதுகளை 106 இளைஞர்களுக்கு அமைச்சர் வழங்கினார்.

2024 மற்றும் 2025-ஆம் ஆண்டுகளில் சிறந்த கலைஞர்களாக இந்த இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

விருது பெற்ற நாடக கலைஞரும், இயக்குநருமான டாக்டர் அனந்த்குமார் பாண்டே எமது செய்திப்பிரிவுக்கு அளித்த பேட்டியில்,

தமது சொந்த மாநிலமான சத்தீஸ்கரில் வளர்ந்துவரும் கலைஞர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர தாம் பாடுபடப் போவதாக கூறினார்.

நடிப்பு, இயக்கம் மற்றும் எழுத்தாக்கத்தில் தமது புதிய படைப்புகளை வழங்க இருப்பதாகவும் டாக்டர் அனந்த்குமார் பாண்டே தெரிவித்தார்.

<<<<<>>>>>>

விவசாயிகளுக்கான வேளாண் திட்டங்களுக்கான மேம்படுத்தப்பட்ட இணையதள சேவையை மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் இன்று தொடங்கிவைத்தார்.

புதுதில்லியில் இத்திட்டத்தை தொடங்கிவைத்து பேசிய அவர், மேம்படுத்தப்பட்ட இந்த இணையதள சேவை, விவசாயிகளின் சிரமத்தையும், நேரத்தையும் குறைக்கும் என்று தெரிவித்தார்.

அரசு அலுவலகங்களுக்கு நேரடியாக சென்று அரசின் திட்ட உதவிகள், மானியங்கள் குறித்த விவரங்களை சமர்ப்பிக்க வேண்டியதில்லை என்றும், இணையதளம் மூலமாகவே சேவைகளை பெற்று பயன்பெறலாம் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் அனைத்து குடிமக்கள் குறிப்பாக விவசாயிகள் கைபேசி மூலமாக தொடர்புகொண்டு அரசின் திட்ட உதவிகளை பெற வேண்டும்

என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையை பூர்த்தி செய்யும் வகையில் இந்த இணையதள சேவை மேம்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

விவசாயிகள், வேளாண் உற்பத்தி அமைப்புகள், வேளாண் கூட்டுறவு சங்கங்கள், வேளாண் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், வேளாண் புத்தாக்க நிறுவனங்கள் ஆகியவை இந்த இணையதள சேவை தளத்தில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

இந்த இணையதளத்தின் மூலம் விவசாயிகள் நேரடியாகவும், எளிதாகவும் அரசின் நலத்திட்டங்களை பெற முடியும்.

அரசின் மானியத் திட்ட உதவிகள் விவசாயம் தொடர்பான தகவல்களை கைபேசி மூலமாக பெறுவதற்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இடைத்தரகர்களின் சுரண்டலை தடுக்கும் வகையில் விளைப்பொருட்கள் குறித்த தகவல்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

<<<<<>>>>>>

இந்தியா — கிரீஸ் நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த அந்நாட்டு தூதர் திருமதி **Aliki**

**Koutsomitopoulou** சிறப்பான ஒத்துழைப்பு நல்கியதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பாராட்டு தெரிவித்தார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள டாக்டர் ஜெய்சங்கர், திருமதி **Aliki-**யின் பணிகளை இந்தியா எப்போதும் நினைவுகூறும் என்று அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் வெளியுறவுத்துறை பணியில் மேலும் சிறப்பான இடத்தை பெற வாழ்த்துகளை தெரிவிப்பதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

**Swift** அமைப்பின் தலைமைச்செயல் அதிகாரி திரு **Javier Perez-**யும் டாக்டர் ஜெய்சங்கர் இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

உலகளாவிய வர்த்தகத்தை எளிமைப்படுத்துவது, திறன் மேம்பாடு மற்றும் அரசியல் மாற்றங்கள் குறித்தும் தாம் அவரிடம் விவாதித்ததாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

இஸ்லாமிய ஒத்துழைப்பு கவுன்சில் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியாவுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இம்மாதம் 17, 18-ஆம் தேதிகளில் பாக்தாத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், இந்தியாவுக்கு எதிராக தவறான மற்றும் உள்நோக்கத்துடன் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் தீர்மானத்தை முன்மொழிந்திருப்பது ஒருதலைபட்சமானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கு இந்த இஸ்லாமிய ஒத்துழைப்பு கவுன்சிலிக்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லை என்றும் இந்தியா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்கள் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதி என்று அதில் கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தரப்பில் இப்பகுதிகள் குறித்து தவறான பிரச்சாரம் மேற்கொள்ளப்படுவதாகவும் வெளியுறவுத்துறை அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அரசியல் சட்டத்தின் 370-ஆவது பிரிவு நீக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஆண்டுகளில் இப்பகுதிகளில் பொருளாதார வளர்ச்சி உத்வேகம் அடைந்துள்ளதாகவும், உள்கட்டமைப்பு, சுற்றுலா மற்றும்

போக்குவரத்து தொடர்பு வசதிகள் பல மடங்கு மேம்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள ஜம்மு காஷ்மீர் பகுதியில் வன்முறை கட்டப்படுத்த இயலாத அளவில் இருப்பதாகவும், அப்பாவி பொதுமக்கள் இரக்கமற்ற முறையில் கொல்லப்படுவதாகவும் இந்தியா தெரிவித்துள்ளது.

அங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து கருத்துகளை வெளியிட ஊடகங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் இந்தியா கூறியுள்ளது.

<<<<<>>>>>>

இவ்வாண்டின் மனித உரிமைகள் தொடர்பான வினாடி — வினா போட்டியில் உத்தரப்பிரதேசம், மகாராஷ்ட்ரா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலிருந்து அதிகம் பேர் பங்கேற்றதாக தேசிய மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

மத்திய அரசின் mygov இணையதளம் மூலமாக கடந்த செப்டம்பர் ஒன்றாம் தேதிமுதல், இம்மாதம் 10-ஆம் தேதிவரை நடத்தப்பட்ட இந்த வினாடி — வினா போட்டியில் மகிழ்ச்சியான

வாழ்க்கை, சுதந்திரம், சமத்துவம், கண்ணியம் ஆகிய தலைப்புகளில் இந்த வினாடி — வினா போட்டிகள் நடைபெற்றன.

இதில், பத்து பேருக்கான பரிசுகளை அறிவித்துள்ளது.

முதல் பரிசான 15 ஆயிரம் ரூபாயை ஆர்த்தி மகாஜன் வென்றுள்ளார்.

இரண்டாவது பரிசாக 10 ஆயிரம் ரூபாயை ரித்திகாவும், மூன்றாவது பரிசாக 5 ஆயிரம் ரூபாயை Tooba Benazeer-ரும் வென்றுள்ளனர்.

ஏழு பேருக்கு ஆறுதல் பரிசாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

நாடு முழுவதிலும் 18-லிருந்து, 24 வயதுக்கு உட்பட்டோர் இப்போட்டிகளில் பங்கேற்றனர்.

<<<<<>>>>>>

ஏமன் நாட்டின் Shabwa மாகாணத்தில் Houthi படையினர் நடத்திய ஏவுகணை தாக்குதலில் அந்நாட்டின் 20 வீரர்கள் கொல்லப்பட்டனர். 25-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஈரான் நாட்டின் ஆதரவுடன் செயல்பட்டுவரும் Houthi படையினர் மூன்று சக்திவாய்ந்த ஏவுகணைகள் மூலம் இந்த தாக்குதலை நடத்தியதாக கூறப்படுகிறது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இதுவரை **4** தங்கம், **5** வெள்ளி, **2** வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டிகளில் ஆடவர் நீளம் தாண்டுதலில் இந்தியாவின் **Nishad Kumar** தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

ஜூடோ **52** கிலோ எடைப்பிரிவில் **Kokila Kaushik** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் **100** மீட்டர் நீச்சல் பிரிவில் **Budigina Ravi Karthik** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் ஈட்டி எறிதல் பிரிவில் **Rinku** தங்கப்பதக்கத்தையும், **Ajeet Singh** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் ஆயிரத்து **500** மீட்டர் ஓட்டத்தில் **Soumya** தங்கப்பதக்கத்தையும், **Radha Venkatesh** வெள்ளிப்பதக்கத்தையும், **Ravanni Valasanani** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

**<<<<<END>>>>>>**